\\

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

அனுப்புநர்:
திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்:
1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,

2) அனைத்து செயற்பதிவாளர்கள்.

ந.க.1153/2020/கூ.தே.3 நாள்: 26.09.2022

ஐயா/அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுத் தேர்தல்கள் – விதி எண் 52(18)(a) மற்றும் 53(11)(a)–ன் கீழ் சட்டஒழுங்கு எனக்காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: ஆணையத்தின் கடிதம் ந.க.எண்.1153/2020/கூதே.3 நாள் 10.09.2020.

பார்வையில் கண்ட கடிதத்தில் (நகல் இணைப்பு) கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் அலுவலர்கள், சில சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளின் போது 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகள், விதி எண்.52(18)(a) மற்றும் 53(11)(a)–ன் படி சங்கத் தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தியது பற்றி ஆணையத்திற்கு அனுப்பியுள்ள அறிக்கைகளை ஆணையம் பரிசீலனை செய்து அவற்றில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை தெரிவித்தும், இந்நிலை மேலும் தொடராது காத்திடவும், தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை முறையாகக் கையாண்டு, தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும் பல்வேறு சங்கத் தேர்தல் நடவடிக்கைகளில் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினை தவறாக பயன்படுத்தி (Abuse and misuse of power and authority) தேர்தல் அலுவலர்கள் தாமாக (Suo motu), ஒருதலை பட்சமாக (Partisan), தங்களது விருப்பத்திற்கிணங்க (on their whims and fancies), சட்டத்திற்கு முரணாக, (Contrary to law), சட்டத்தின் முன் நிலைநிறுத்த முடியாத (unenforceable), நிறுத்தல் ஆணைகளை (Stop order) தற்போதும் பிறப்பிக்கின்றனர் என்பது ஆணையத்தின் கவனத்திற்கு வந்துள்ளது.

இந்நிலையினை ஆணையம் கவனத்துடன் பரிசீலித்து அதனடிப்படையில் ஏற்கெனவே பார்வையில் வழங்கப்பட்ட அறிவுரைகளுடன் கீழ்வரும் அறிவுரைகளை விதி எண்.52-A(9) மற்றும் (10)-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினைக் கைக்கொண்டு ஆணையம் வழங்குகிறது.

விதி எண்.52 (18) (a)-ல் சொல்லப்பட்டுள்ளதாவது :

> *"கலகம் அல்லது வெளிப்படையான வன்முறை தேர்தல் நடவடிக்கைகள் எந்தநிலையிலாவது குறுக்கீடு செய்யப்பட்டாலோ அல்லது தடுக்கப்பட்டாலோ அல்லது இயற்கை சீற்றத்தால் பேரிழப்பு காரணமாக மேற்கொண்டு தேர்தலை நடத்த முடியாது என்கிற நிலையில், அத்தகைய செயலுக்கான காரணங்களை, எழுத்தாலான பதிவு செய்து, தேர்தலை நிறுத்தி வைக்க, தேர்தல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு."*

விதி எண்.53 (11) (a)-ல் கூறப்பட்டுள்ளதாவது :

> *கலகம் விளைவிப்பவர்களால் அல்லது வெளிப்படையான வன்முறையினால், தேர்தல் நடவடிக்கைகள் எந்நிலையிலாவது குறுக்கீடு செய்யப்பட்டாலோ அல்லது தடுக்கப்பட்டாலோ அல்லது இயற்கை சீற்றத்தின் பேரிழப்பு காரணமாக, மேற்கொண்டு தேர்தலை நடத்த இயலாத நிலையில், அத்தகைய செயலுக்கான காரணங்களை, எழுத்தாலான பதிவு செய்து, தேர்தலை நிறுத்தி வைக்க, தேர்தல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு."*

மேலே சொல்லப்பட்ட விதி எண்.52 (18) (a) மற்றும் விதி எண்.53 (11) (a) ஆகியவற்றினை ஆணையம் மிக கவனமாக பரிசீலனை செய்ததில் :

*"கலகம் அல்லது வெளிப்படையான வன்முறை தேர்தல் நடவடிக்கைகள் எந்த நிலையிலாவது குறுக்கீடு செய்யப்பட்டாலோ அல்லது தடுக்கப்பட்டாலோ" என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. அதாவது தேர்தல் அலுவலர் தேர்தல் நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில் அவ்வகை சம்பவங்கள் ஏற்பட்டால் மட்டுமே (Only at*

*the time of)* *தேர்தல் அலுவலர் தேர்தலை நிறுத்தலாம் என்று அறியமுடிகிறது. அம்மாதிரி சம்பவங்கள் நிகழப்போவதாக எண்ணியோ, அல்லது அச்சத்தினாலோ (Anticipation, Assumption and Apprehension) தேர்தல் நடவடிக்கையை நிறுத்த தேர்தல் அலுவலருக்கு அவ்விதிகளின் கீழ்* அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் இம்மாதிரி காரணங்களை கூறி விதிகளுக்குப் புறம்பாக தேர்தலை நிறுத்துவது சட்ட விரோதமானது. இம்மாதிரி செய்கைகள் ஆணையம் சுதந்திரமான, நேர்மையான, வெளிப்படையான தேர்தல் நடத்தும் தனது கடமையை செய்வதில் குறிக்கீடு செய்வதாகும் மற்றும் தடுப்பதாகும் என்றும் ஆணையம் கருதுகிறது.

இவ்வகையில் 2018 ஒட்டுமொத்த தேர்தல்களில் (Enmasse 2018) 115 சங்கங்களுக்கான தேர்தல்களை தேர்தல் அலுவலர்கள் நிறுத்தியுள்ளனர் என்பது மிகவும் கவலை தருவதாகும். இந்நிலை இனியும் தொடர இடம் தரலாகாது என்று ஆணையம் வலியுறுத்த விரும்புகிறது. தவிரவும் மீண்டும் தேர்தல்கள் நடத்துவதற்காகும் காலவிரயம், பணச்செலவும், பொருட்செலவு, மனித சக்தி வீணாதல் (Loss of Manpower) போன்ற எதையும் கருத்தில் கொள்ளாது மிகச் சாதாரணமாக அற்ப காரணங்களைக்காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துவது மிகவும் கண்டனத்திற்குரியதும் ஏற்றுக் கொள்ள இயலாததுமாகும் என்று ஆணையம் திடமாக கருதுகிறது.

எனவே இது தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுரைகளைக் கைக்கொள்ளாது, விதி.எண். 52(18)(a) மற்றும் விதி எண் 53(11)(a) ஆகியவற்றில் சொல்லப்பட்டவைக்கு முரணாக தேர்தல் அலுவலர் தேர்தல் நடவடிக்கையினை நிறுத்தம் செய்யும் நிலையில் விதி எண்.52(18) (a)–ல் அறிவுறுத்தப்பட்டவாறு தேர்தலை நிறுத்தப்பட்ட விபரத்தை தேர்தல் நிறுத்தப்பட்ட தினத்தன்றே மாலைக்குள் தேர்தல் அலுவலராலும், மாவட்ட தேர்தல் அலுவலராலும் உடனடியாக ஆணையத்திற்கு அறிக்கை (Report) செய்திட வேண்டும். மேலும் மாவட்ட தேர்தல் அலுவலர் அதனை உடனடியாக பரிசீலனை செய்து அந்நடவடிக்கை சட்ட முரணானதுதான் என்று உறுதியாகும் நிலையில் தேர்தல் அலுவலரின் சட்டவிரோத ஆணையினை உடனடியாக ரத்து செய்து, மாற்று தேர்தல் அலுவலரை நியமித்து தேர்தல் நடவடிக்கை எந்நிலையில் நிறுத்தப்பட்டதோ அதே நிலையில் மீண்டும் தேர்தல் நடவடிக்கையினை தொடர்ந்து மேற்கொள்ளவும், சட்ட முரணாக ரத்து செய்த அத்தேர்தல் அலுவலர் மீது பணி இடை நீக்கம் (Suspend) போன்ற உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்து ஆணையத்திற்கு உடனடியாக அறிக்கை அனுப்பவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இதனை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வரும் அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவித்திடவும் தெரிவிக்கப்பட்ட விபரத்தை 10.10.2022–க்குள் ஆணையத்திற்கு அறிக்கை அனுப்பிடவும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–
ஆணையர்

26/9/22

ஆணையருக்காக

26.9.2022

நகல் :

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை–9.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை–9.
3. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை–9.
4. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை–9.
5. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை–9.
6. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை–9.
7. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை–9.
8. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை–9.
9. காவல்துறை இயக்குநர்.
10. மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
11. அலுவலக இருப்புக் கோப்பு 2022.

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை–18.

அனுப்புநர்
முனைவர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை-600 018.

பெறுநர்
1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்
2. அனைத்து செயற்பதிவாளர்கள்/ மாநில தேர்தல் அலுவலர்கள்

ந.க 1153 /2020 /கூ.தே3 நாள்: 10.09.2020

ஐயா/அம்மையீர்,

பொருள் : கூட்டுறவுத் தேர்தல்கள் – நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர், துணைத்தலைவர் தேர்தல்கள் – 1988 –ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகள், விதி எண் 52(18)(a) மற்றும் விதி எண் 53(11)(a) ஆகியவற்றின் கீழ் தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல் (Stop) – சில அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

-----

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் திட்டங்கள் மாவட்ட தேர்தல் அலுவலரால் வெளியிடப்பட்டு, அவரால் நியமிக்கப்படும் (Appoint) வாக்காளர் பட்டியல் அலுவலர் (Electoral Officer) மற்றும் தேர்தல் அலுவலர் (Election Officer) ஆகியோரால் 1988 –ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், (இனி விதி எனப்படும்) விதி எண் 52 மற்றும் 53 ஆகியவற்றின் கீழ் தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சில தேர்தல் நடவடிக்கைகளின் போது அவற்றை தொடர்ந்து நடத்த இயலாத சூழ்நிலைகளில் மேற்சொன்ன தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்களில் விதி எண் 52(18)(a) –ன் கீழும், தலைவர், துணைத்தலைவர் தேர்தல்களில் விதி எண் 53(11)(a) –ன் கீழும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தி (Stop) ஆணையிடுகின்றனர். அவ்வாறு தேர்தல் நிறுத்தப்பட்ட விபரத்தினை அதற்கான காரணங்களைத் தெரிவித்து, விதி எண் 52(18)(b) மற்றும் விதி எண் 53(11)(b) –ன் கீழ் கட்டளையிட்டுள்ளபடி ஆணையத்திற்கு அறிக்கை (Report) அனுப்புகின்றனர்.

மேற்கூறப்பட்ட அறிக்கைகளை ஆணையம் மிகக்கவனமுடன் பரிசீலித்ததில், அவற்றில் விதிகள் பற்றி சரிவர அல்லது முற்றிலும் குறிப்பிடப்படாதும், விதியில் கூறப்படாத காரணங்களின் அடிப்படையில் தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருப்பதும், நிறுத்தப்பட்ட பல இனங்களில் தேர்தல் அலுவலர்கள் உரிய கவனம் (Proper application of mind) செலுத்தாதும், இவ்வாறு நிறுத்தப்படும் நிலையில் எழும் சட்டப்பூர்வ விளைவுகள் மற்றும் தாக்கத்தை (Legal Consequences and Seriousness) கவனியாதும் மிகவும் வாலாயமாக தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தி ஆணையிட்டிருப்பதும் மற்றும் பல குறைபாடுகளும் கண்டறியப்பட்டன.

தேர்தல் அலுவலர்களின் இச்செயல்பாடுகள் கூட்டுறவு சங்கதேர்தல்களை நடத்துவதில் கால விரயம், நிதி மற்றும் மனித சக்தி இழப்பு ஆகியவற்றை ஏற்படுத்துவதாகவும் அரசியலமைப்பு சட்டத்தின்படியான சட்டபூர்வ கடமையினை (Constitutional Obligation) ஆணையம் நிறைவேற்றுவதில் இடையூறு செய்வதாகவும் கருத இடமுள்ளன.

இவ்வாறு போதிய சட்டப்பூர்வ காரணங்களின்றி தேர்தல் நடவடிக்கைகள் தேர்தல் அலுவலர்களால் நிறுத்தப்படுவது குறித்து, மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்பமை கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்புக் குழுக்கள் கடுமையாக விமர்சித்துள்ளது.

இந்நிலை மேலும் தொடராது காத்திடவும், தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை தேர்தல் அலுவலர்கள் விதிகளுக்குட்பட்டு முறையாகக் (Proper) கையாண்டு தேர்தல்களை சுதந்திரமாகவும் நியாயமாகவும் (Free and fair) நடத்திடவும் கீழ்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

(1) எந்தவொரு தேர்தல் நடவடிக்கையினையும் விதி எண் 52(18)(a) மற்றும் 53(11)(a) ஆகியவற்றில் சொல்லப்பட்ட காரணங்களுக்காக மட்டிலுமே தேர்தல் அலுவலர் நிறுத்தலாம் (Shall have power to stop).

(2) தேர்தல் நடவடிக்கைகள் நடைபெற்று வரும் நிலையில் கலகம் (Riot) மற்றும் வெளிப்படையான வன்முறை (Open Violence), இயற்கை சீற்றத்தால் பேரிழப்பு போன்ற சம்பவங்களால் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள இயலாத நிலையில் மட்டுமே அத்தேர்தல் நடவடிக்கையினை நிறுத்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதே தவிர, இச்சம்பவங்களை எதிர்நோக்கியோ (Anticipate) அல்லது ஊகம் செய்தோ (Presume or Assume) அல்லது உரிய வழிகாட்டுதல் இன்றி காவல் துறை அலுவலர் எவரிடமிருந்தாவது அறிக்கை பெற்றோ தேர்தல் நடவடிக்கையினை நிறுத்துவதற்கு விதி எண் 52(18)(a) மற்றும் விதி எண் 53(11)(a) –ல் வழிவகை செய்யப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(3) தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்படும் நிலையில் அவ்வாறு நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் பதிவு செய்திடல் (Record) வேண்டும்.

(4) தேர்தல் நடவடிக்கை விதி எண் 52(18)(a) அல்லது விதி எண் 53(11)(a) கீழ் நிறுத்தப்பட்டுள்ள விபரம் (Fact) உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும் (Announce) .

(5) தேர்தல் நடவடிக்கை நிறுத்தப்பட்ட விபரம் மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையத்திற்கு உடனடியாக அறிக்கை (Report) செய்யவேண்டும்.

(6) தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் தேர்தல் அலுவலர்கள் தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்த விரும்பும் நிலையில் மேற்கூறப்பட்ட அறிவுரைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும். தங்களுக்கு ஏற்பட்ட சட்டபூர்வ கடமைகளை செய்ய தவறுவதோ அல்லது தவறாக செய்வதோ (Nondoing or Misdoing) சட்ட மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு இடம் தருவதாக அமையும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

(7) மாநில தேர்தல் அலுவலர்கள் விதி எண் 52(3)(c) –ன் கீழ் பொறுப்பாக்கப்பட்டுள்ளபடி, மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் தேர்தல் அலுவலர்களுக்கு விதி எண் 52(18)(a)/53(11)(a) –ன் கீழ் தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்துவது தொடர்பான அறிவுரைகளை தவறாது கைக்கொள்ள அறிவுறுத்திடவும் இது தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய அறிக்கையினை 25.09.2020 க்குள் ஆணையத்திற்கு அனுப்பிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஓம்/–

ஆணையர்

ஆணையருக்காக

10.09.2020

10.09.2020